பதிவு எண் . ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 5உ (21—11—67) செவ்வாய் வெளியூர்: கார்த்திகை 6உ (22—11—67) புதன் [இதழ்: 132

## ஆங்கில நீடிப்புக்குக் கையெழுத்து இயக்கம்

'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்று பம்பாயில் பல துறைகளையும் சேர்ந்த 25,000 பேர் கையெழுத்திட்டு தலைமை அமைச்சரிடம் ஒரு மனு கொடுத்துள்ளனர்.

பெண்கள் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு இந்தக் கையெழுத்து இயக்கத்தைத் துவக்கியுள்ளது.

இந்த மனுவின் படிகள், மத்திய கல்வி அமைச்சர்—நாடாளுமன்ற உறுப்பினர்கள்—பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# கோவிந்ததாசுக்கு மீண்டும் ஒரு நன்றி

இருக்குமிடத்தைக் காட்டிக் கொள்ளாமல் இருக்கத் தெரியாத சில கொடிய பிராணிகளும் உண்டு!

'ஆபத்தானவை' என்றாலும், அதை உள்ளடக்கி—வெளியே அமைதித் தோற்றத்தை மட்டும் காட்டிக் கொண்டிருக்கும் உயிரினங்களும் இருக்கின்றன!

முன்னதற்கு உதாரணம்—சேத் கோவிந்ததாஸ் போன்ற இந்தி வெறியர்கள்!

பின்னதற்கு எடுத்துக்காட்டு—மத்திய அரசின் துணையுடன் வரும் இந்தி ஆதிக்கம்!

'பாம்பு கடித்துவிடும்; அருகில் செல்லாதே' என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அது—சீறியும் வந்து தாக்குகிறது என்றால்—அதை அடித்துத் தொலைக்கவேண்டிய புதிய வேலை வந்திருக்கிறது என்றாலும், இனியும், 'அது கடிக்கும்' என்று பாடம் புகட்டிக்கொண்டிருக்கும் வேலை மிச்சமாகிறது!

துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், நமது மாநில சட்டத்துறை அமைச்சர் மாதவனுடன் 'மோதி'யதனையும்,

### உள்ளும் புறமும்

அதற்கும் பல நாட்களுக்குப் பின்னர் — தென் சென்னைத் தேர்தலுக்குச் சிலநாட்களுக்கு முன்னர் — கான்பூர் நகரில் சேத் கோவிந்ததாஸ், 'இராணுவ'த்தைக் காட்டி மிரட்டியதும், ஒரு வகையில், நமது வேலைகளை எளிதாக்கியவை தான்!

கட்சி மட்டத்திலும்—நிர்வாக மட்டத்திலும், மேலிடமும் பெரியவர்களும், அந்த இருவரையும் எவ்வளவு தூரம் கடிந்துகொண்டார்கள் — எத்தனை வகையில் இடித்துரைத்தார்கள் என்பது, புதுடில்லி ஒளித்து வைத்துக்கொண்டிருக்கும் இரகசியங்கள்!

காங்கிரசுத் தலைவர் காமராசரேகூட, 'தென் சென்னைத் தேர்தலின் தோல்விக்கான காரணங்களில் ஒன்றாக சேத் கோவிந்ததாசின் இராணுவ மிரட்டலையும் எடுத்துக் காட்டினார்' என, பத்திரிகைகள் சில எழுதின!

'காரியத்தை இப்படியா கெடுத்து விடுவது?' என, அமைச்சரவைப் பெரியவர்கள் சிலர், மொரார்ஜியின் மீது வருத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதும் வதந்தியல்ல—உண்மைதான்!

இப்போதும் சமயமறிந்து, தன்னாலான கைங்கரியத்தினைச் செய்திருக்கிறார் சேத் கோவிந்த தாஸ்; அதாவது, இந்தி ஆதிக்கத்தின் ஆபத்தினை விளக்கிக் காட்டும் நமது வேலையினை, வெகுவாகக் குறைத்திருக்கிறார்!

"ஆங்கிலமும்—எந்த ஒரு தனி மாநிலமும் விரும்பும் வரையில்—ஆட்சி மொழியாக நீடிக்கும் வகையில் மசோதா சட்டமாகிப் பிரயோசனமில்லை; அந்த வகையில், அரசியல் சட்டமே திருத்தப்பட வேண்டும்"

என்பது, கழகத்தின்—கழக அரசின்—தமிழக மக்களின்—மாணவர் உலகத்தின் விருப்பம் -- வேண்டுகோள்!

"மசோதா சட்டமாவதே போதும்; பாதுகாப்பானது" என்று—மத்திய அரசுக்கும் முந்திக்கொண்டு வந்து—சமாதானம் கூற வரும் இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கள், இப்போது சேத் கோவிந்த தாஸ், பாட்னாவில் பேசியுள்ளதனைச் சிறிது கவனிக்க வேண்டும்:—

"ஆங்கிலத்துக்கு வழி செய்யும் மசோதா, சட்டமாவது, அரசியல் சட்டத்துக்கு விரோதமானது."

"ஆட்சிமொழிச் சட்டமே விரோதமானது என்றால் அதற்கு ஏற்ற வகையில் அரசியல் சட்டத்தையும் திருத்துவது இரட்டை விரோதமானது"

என்று அவர் எச்சரித்திருப்பதனை, 'வெறும் இந்தி வெறித்தன்மை' என்று மட்டும் தள்ளி ஒதுக்கிவிடக்கூடாது.

நாம் ஏன், அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கேட்கிறோம்—என்பதற்கு, அவர் மறைமுகமாக நமக்கு உதவி புரிந்திருக்கிறார்—

"அப்படியே ஆட்சிமொழிச் சட்டம், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிட்டாலும், அது, 'அரசியல் சட்டத்துக்குப் புறம்பானது' என்று நீதிமன்றத்

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# அரியானாவில் 'சட்டமன்ற வியாதி'-- குடியரசுத் தலைவரின் அரசியல் சட்டச் 'சிகிச்சை'!

## உறுப்பினர்கள் நடமாட்டம் -- அமைச்சரவை கலைக்கப்படுகிறது

'மாநிலத்தின் சட்ட முறைமை பழுதுபட்டுவிட்டது' என்ற கவர்னரது சிபாரிசின் பேரில், குடியரசுத் தலைவர், இன்று அரியானா அமைச்சரவையைக் கலைக்கும் உத்தரவு ஒன்றுக்குக் கையெழுத்திடுகிறார்—என, புதுடில்லித் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

வெறுமையாக இருக்கும் இடங்கள் மூன்றினை நீக்கி எஞ்சியிருக்கும் 78 இடங்கள் கொண்ட சட்டமன்றத்தில், ஆளுங்கட்சி—எதிர்க் கட்சிகளின் பலம் சரி பாதியாகப் பிரிந்துவிட்டதால், எத்தரப்பினரும் ஒரே ஓர் எண்ணிக்கை பெரும்பான்மைகூட பெறாத நிலை பிறந்திருக்கிறது!

41 உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் துவங்கிய 'சம்யுக்த தள'த்தின் ஆளுங்கட்சியில், 23 பேர்களுக்கு அமைச்சர் மற்றும் அத்தொடர்பான மற்றைய பதவிகள் முதலமைச்சா பிரேந்தர் சிங் தலைமையில் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், கடந்த மார்ச் மாதம் முதல் மொத்தம் 36 உறுப்பினர்கள் கட்சி மாற்றம் செய்திருக்கிறார்கள்; இதில் இரண்டு பேர் நான்கு தடவையும், இரண்டு பேர் மூன்று முறையும், நான்கு பேர் இரண்டு முறையும் அவ்வப்பொது கட்சி மாறியிருக்கின்றனர்!

முதன்முதலில் நான்கு ஜனசங்க உறுப்பினர்கள், 'சம்யுக்த தளம்' என்னும் ஆளும் கட்சி அமைப்பிலிருந்து காங்கிரசுக்குக் கட்சி மாற்றம் செய்ததன் விளைவாகத்தான், பின்னர் தொடர்ந்து சட்டமன்ற நடமாட்டங்கள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1967 தேர்தலுக்குப்பின், முதன் முதல் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பெறும் மாநிலமாக அரியானா இருக்கிறது!

ஏற்கனவே மணிப்பூர், குடியரசுத் தலைவர் நிர்வாகத்துக்கு மாறியிருக்கிறது; எனினும், அது ஒரு மத்திய ஆட்சிப் பகுதியே தவிர, மாநிலமல்ல!

## சென்னை வாழ்க்கைச் செலவு

நவம்பர் 11-ந்தேதியுடன் முடிந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒரு புள்ளி உயர்ந்து 711-ல் நின்றது.

காய்கறிகள், இறைச்சி இவற்றின் விலை உயர்வே இதற்குக் காரணம்.

## 'தாகத்துக்கு விஷத்தைக் குடித்திருக்கிறார்!'

### ஹெரால்டு வில்சன் பற்றி மா சே-துங் வர்ணனை!

"பவுன் நாணய மதிப்பைக் குறைத்திருப்பதன் மூலம் பொருளாதார—நிதிக் குறைபாடுகளைச் சரிசெய்துவிடலாம் என வில்சன் நடவடிக்கை எடுத்திருப்பது 'தாகமாக இருக்கிறதே' என்பதற்காக விஷத்தைக் குடிப்பதுபோல் உள்ளது"

என்பதாக, நவசீன செய்தி நிறுவனம் கருத்துத் தெரிவித்திருக்கிறது.

மா சே-துங்கைப் பிரதிபலிக்கும் இந்த மக்கள் சீனாவின் கருத்து இலண்டன் பொருளாதார வட்டாரங்களில் வேடிக்கைகலந்த சிந்தனையைக் கொடுத்திருக்கிறது!

## திருவனந்தபுரத்தில் 'மா சே-துங்'!

### பாதைகளில் --- சுவர்களில் சீனத் தலைவர் தத்துவங்கள்

சிவப்பு வண்ணத்தில் எழுதப்பட்டுள்ள சீனத் தலைவரின் கருத்துக்கள் திடீரெனத் திருவனந்தபுரத்தின் பாதைகளில்—சுவர்ப்புறங்களில் காணப்படுகின்றன!

மக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் உள்ள இந்த அறிவிப்புக்கள், மா சே—துங்கின் புத்தகத்திலிருந்து — சொற்பொழிவுகளிலிருந்து எடுக்கப்பட்டவை எனத் தெரிகிறது!

"துப்பாக்கி இல்லாமல் அரசியல் அதிகாரம் வளர்ச்சியைப் பெறாது!"

"'மக்கள் படை' ஒன்று இல்லாமல், மக்கள் ஏதும் செய்யமுடியாது"

என்பன போன்ற முழக்கங்கள், சிவப்பு வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன!

திருவனந்தபுரம் வந்தபோது, நக்சலபாரியில் நடப்பது ஒரு 'காபிக் கடைப் புரட்சி' என்று வர்ணித்த வங்காளத்து மார்க்சீய அமைச்சர் அரிகிருஷ்ண கோனாரைக் கேலி செய்யும் வகையில்,


"கோனார் அவர்களே! எது காபிக் கடைப் புரட்சி? நக்சல்பாரியா? அல்லது 'நாற்காலி'யில் அமர்ந்திருக்கும் உங்கள் அமைச்சர் தோரணைப் பிதற்றலா?"

என்றும் ஓர் இடத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது!

# பட்டமளிப்பு விழா உரை தந்த படிப்பினை

## இந்தி வெறியர்கள் பெறவேண்டிய பாடம்--ஒரு விளக்கம்

"நேற்று அவர் (அறிஞர் அண்ணா) ஆற்றிய பட்டமளிப்பு விழா உரை, வடக்கே உள்ள இந்தி வெறியர்களுக்குத் தரப்பட்ட எச்சரிக்கையாகும்.



"இப்போது இருக்கும் உருவிலேனும் வரவிருக்கும் ஆட்சி மொழி மசோதா சட்டமாவதைத் தடுக்க இந்தி ஆதிக்கவாதிகள் முனைவார்களானால், 'அது, தமிழகத்தில், வேண்டாத விளைவுகளைத்தான் கொடுக்கும்; அந்தப் போக்கு, மத்திய—மாநில அரசுகளின் உறவுமுறைகளைக் கெடுக்கும் நிலைக்குத்தான் வழிவகுக்கும்' என்ற அறிவிப்பைத் திட்டவட்டமாகத் தெரிவிப்பதாக இருந்தது—தமிழக முதலமைச்சரின் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரை"

என கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மன்' 20—11—67-ம் நாள் இதழில் வெளிவந்துள்ள செய்தி ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

"இப்போது உருவாக இருக்கும் ஆட்சிமொழிச் சட்டம் கொண்டிருக்கும் வழிவகைகள் மட்டுமே மொழிச் சிக்கலைப் போக்கிவிடாது (அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டமும் திருத்தப்படல் வேண்டும்) என்ற அடிப்படைக் கருத்தினையும், முதலமைச்சரின் உரை உள்ளடக்கியிருக்கிறது"

என 'ஸ்டேட்ஸ்மன்' இதழின் தென்னக நிருபர், அச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

# வறியோர் வாழ்வு மலரட்டும்!

# ஏழைகளின் கண்ணீர் மறையட்டும்!

## ஆதரவற்றேருக்கு ஊன்றுகோலாய்த் தொண்டாற்ற முனைவீர்-சமுதாயப் பணிகளுக்கு உழைப்பைக் காணிக்கையாக்குவீர் !

### பட்டம் பெற்ற பல்கலைக் கழக மாணவரிடையே அறிஞர் அண்ணு அறிவுரை

“வாழ்வின் தலைவாயிலில் நிற்கும் பட்டதாரிகளே ! வளமான எதிர்காலம் உங்களை எதிர்நோக்கியபடி உள்ளது—உங்களது வாழ்வு எல்லா வளமும் பொருந்தியதாக அமையட்டும் ! ஒவ்வொருவரும் தமது சொந்த வாழ்வில் பல்வளமும் பெற்றிட விரும்பிடுவதும், அதற்கான உறுதி பூண்டு உழைத்திடுவதும், அவர்கள் பட்டதாரிகளானுலும்—பட்டதாரியல்லாத பாமரரேயானுலும் மெத்தவும் அவசியமானதாகும்.

“வாழ்வு, தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டியது பாங்கான—கறைபடாத வாழ்வு வாழ்ந்திடத் தேவையான—பொருளீட்டிடும் நோக்கம், இன்றியமையாத ஒன்று - ஒவ்வொருவருக்கும் ; வாழ்வுத் தேவைக்கான பொருளீட்டிடும் நோக்கத்தினை அலட்சியம் செய்திடவே முடியாது - எவராலும் ! அது ‘கூடவே கூடாது’ என்பேன் !

“வாழ்வதற்குப் பொருள் தேவை - மிகமிகத் தேவைதான் ; ஆனுல், வாழ்வின் குறிக்கோள் - அதிலும் பட்டதாரிகளே ! வாழ்வில் நுழைந்திடும் உம் போன்ருரின் குறிக்கோள் பொருளீட்டுவதோடு நின்றுவிடுகிறதா ? நின்றுவிடத்தான் வேண்டுமா? நின்றுதான் விடலாமா ?—கூடாது ! கூடவே கூடாது !

“‘தனித்த வாழ்வில்—சொந்தக் குடும்ப முன்னேற்றத்துக்கான அடிப்படையில் பணங்தேடிடுவது என்பது மட்டுமே வாழ்வின் குறிக்கோள்’ என்ற முறையில் நீவிரெல்லாம் ஒழுகிட வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை ; நான மட்டுமல்ல—நாட்டுச் சமுதாயமே அப்படித்தான் கருதுகிறது.

“பொருளீட்டும் நோக்கத்தோடு, அதனுடன்—ஏன் அதையும்விடச் சிறந்த - உயர்ந்த மாண்புறும் பொது நோக்கு, பொது நன்மை ஆகியவற்றுக்காகவும் நீங்கள் உழைத்திட வேண்டும் ; சமூகம் இதைத்தான் உங்களிடமிருந்து சிறப்பாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது ; இது உங்கள் கடமை—சமூகக் கடமையும்கூட !

“இத்தகு கடமையை—சமுதாயத்திற்கான அருந்தொண்டாற்றிடும் கடமையை, உங்களிடமிருந்து சமூகம் எதிர்பார்ப்பதில் தவறில்லை ; ஏனெனில், சமூகத்திற்கு நீங்கள் பெரிதும் கடமைப்பட்டவர்கள் - கடன்பட்டவர்களும் ஆவீர்கள் ; ஒன்றை, பட்டதாரிகளான நீவிர் அனைவரும் முதற்கண் உங்கள் நெஞ்சத்தில் நிறுத்திட வேண்டுகிறேன் ”

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய பட்டமளிப்பு விழா உரையில் மாணவர்களின் கடமையை நினைவுறுத்திவிட்டு மேலும் குறிப்பிட்டதாவது :—

“ நீவிரெல்லாம் பல்கலைக்கழகத்தில் படித்திடும் வாய்ப்பினைப் பெற்றுள்ளீர் ! வாய்ப்பா அது—மிகச் சிலருக்கே கிட்டிடும் தனிச் சலுகையின் விளைவன்ருே அது ! இந்தத் தனிச் சலுகை—பல்கலைக்கழகத்தில் பயின்றிடும் தனித்ததொரு சிறப்பான வாய்ப்பு பெற்றிட எல்லோருக்கும் முடியும் காரியமா ? கிடைக்கத்தான் கூடுமா ? கொடுத்திடத்தான் ஆகுமா ?

பல்கலைக் கழகங்களை நிறுவி, அவற்றிற்கான நிலபுலன்—கட்டிடத் தேவைகள்—கலைக் கூடங்கள்—இருக்கை வசதிகள்—விஞ்ஞான ஆராய்ச்சி மண்டபங்கள்—இவைகளுக்கெல்லாம் எங்கிருந்து பணம் வருகிறது ? அதுமட்டுமா ? உயர் கல்வி கற்பிக்கும் பேராசிரியர்களுக்கும், வல்லுநர்களுக்கும் வேண்டிய ஊதியமும், எல்லாவற்றையும்விடப் பல்கலைக் கழகங்களை ஆண்டாண்டுதோறும் கட்டிக்காத்து நிர்வகித்திட எத்துணைக் கோடி கோடியாகப் பணம் தேவைப்படுகின்றது ? இதெல்லாம் எங்கிருந்து வருகின்றது ? பல்கலைக்கழகங்களுக்கான செலவின் பெரும் பகுதி அரசின் வருவாய்த்துறை மூலம் பெறப்படும் பெருநிதியிலிருந்துதானே தரப்படுகிறது ? அந்நிதிக்குப் பொருளினை வாரி வழங்கிடும் பெருமக்கள் யார் ? எவர் ?—பெரும்பாலும், உழவர்களும் உழைப்பாளிகளும்தானே !

சமூகத்தின் பெரும்பாலோரின் வரிப் பணத்திலிருந்து சமூகத்தின் அங்கமான சிலருக்குக் கல்லூரிப் படிப்பு பெறும் வாய்ப்பு தரப்படுகிறது ! பலரின் தியாகத்தால் சிலர், சிறப்பு மிகுந்த அறிவுக் கண் பெறுகின்றனர்—ஆராய்ச்சித்திறன் மிக்கோராகின்றனர்—மேதைகளாக்கப்படுகின்றனர்—பட்டதாரிகளாகின்றனர் !

பலரது உழைப்பில் விளைந்த செல்வத்தின் பயனைத் துய்த்துப் பட்டதாரிகளாகியுள்ளீர்கள் ! ‘உங்களுக்காகத் தினையளவேனும் ஒவ்வொருவரும் தியாகம் செய்துள்ளனர்’ என்பதை உணருங்கள் முதலில் !

மக்களுக்கு—சமூகத்தில் மிகப் பெரும்பாலோராக உள்ள சாமானியர்களுக்கு நீங்கள் செலுத்திடப் போகும் நன்றிக் கடன் யாது ? உழவர்களும் செய்திட்ட தியாகத்திற்கு நீங்கள் திருப்பித் தந்திடப் போகும் பண்பு என்ன ? அதுதான் தியாக மனப்பாங்கு ! ஊருக்கு உழைத்திடும் பண்பு ! அதனைப் பெறுவீர்—செயல்படுவீர்—இன்றே !

## பெருநிதிப் பேழை வறண்டு விடுவதா ?

சமூகத்தினிடமிருந்து நீங்கள் பெற்ற உபகாரத்தை எந்தவிதத்திலாவது திருப்பிச் செலுத்திடாமற்போனுல், சமூகத்தின் பெருநிதிப் பேழை வறண்டுவிடும் ; நாளாவட்டத்தில் பொதுவாழ்வே பாலைவனமாகிவிடும் ; தேவையா அது ?

ஏழை மக்களின் வாழ்வெனும் பாலைவனம் சோலைவனமாகிட வேண்டும் ! வருங்காலச் சந்ததிகளாவது வளமெலாம் பெற்று வாழ்ந்திட வழிவகை செய்திடுவது பட்டதாரிகளின் முதற்பெருங் கடமையாகிறது !

பட்டதாரிகளே ! பட்டம் பெற்றிடுவதன் மூலம் உங்களது நிலை உயருகிறது ; நினைப்பு மேலோங்குகின்றது ; பண்பு பக்குவப்படுகின்றது ; சமுதாயத்தில் சிறப்பானதோர் நல்லிடம் காத்துக்கிடக்கிறது—உங்களுக்காக !

சொந்த வாழ்வினைச் சீர்படுத்திச் செம்மைப்படுத்திடும் பணியுடன் பட்டதாரிகள் நில்லாது, சமுதாயத்தைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்திடும் சேவை செய்திட வேண்டுகிறேன்.

பணமல்ல—பண்பே உம்மிடமிருந்து சமுதாயம் எதிர்பார்ப்பது ! சமுதாயத்திற்கான தொண்டுக்கே காணிக்கை செலுத்திட வாரீர் !

இருண்ட சந்துக்களில் ஒளியேற்றிடுவீர்—சலிப்புற்ருேருக்கு ஆறுதலும் தேறுதலும் அளித்திடுவீர்—ஆதரவற்ருேருக்கு ஊன்றுகோலெனத் தொண்டாற்றுவீர்—மக்களின் அகமும் முகமும் மலர்ந்து குளிர அறிவுரை தாருங்கள்—வறுமையை அகற்றுங்கள்—புத்தொளி காணுங்கள்—புதுவாழ்வு -- எல்லோரும் இன்புற்றிருக்க நல்வாழ்வு அமைத்திடுவோம், வாரீர், வாரீர்—என்று அழைக்கிறேன்.

## குறிக்கோளினைச் செயல்படுத்துவீர் !

‘பொதுநலம் புரிந்திட வாரீர் ; புத்துலகு சமைத்திட வாரீர்’ என்ற அழைப்பு, எல்லோராலும் விரும்பத்தக்கது ! குறை கூறிடவே முடியாத குறிக்கோளன்ருே இது ! இதுபற்றிக் கருத்து மாறுபாடும், வேறுபாடும் கொண்டிடுவோர் எவருமே இரார் ; ஆனுல், இக்குறிக்கோளினைச் செயல்படுத்திட முனைந்திடுவோர் எத்துணை பேர்—மிகச் சிலர்தானே ! முனைந்து செயலாற்றிடும் தியாகச் சீலர்களின் தொகை பெருகட்டும் ! தீரர்களின் எண்ணிக்கை வளரட்டும் !

## செயலின்றிச் சொல்லாரம் எதற்கு ?

‘சொல்வது எளிது ; சொல்லியவண்ணம் செயல்படுவது அரிது’ என்பர் சான்ருேர் !

ஆண்டாண்டுக்காலமாக நாம் கேட்டும் – படித்தும் வந்திடும் நல்லுரைகள் ஏராளம், ஏராளம் ; மிக மிக ஏராளம் ; ஆனுல் அவற்றின் செயலுருவந்தான், அந்த அளவுக்குக் காணவில்லை.

சொல்லியவண்ணம் செயல்பட்டு ஒழுகிட வேண்டும் என்பது, எந்தக் காலத்திலும் மறுக்கப்படாத—மறுக்கவே முடியாத கோட்பாடாகத்தான் இருந்துவருகிறது.

உபதேசங்களும் நல்லுரைகளும், வெறும் உபதேசங்களாகவும் நல்லுரைகளாகவும் மட்டுமே இருந்திடின், யாது பயன் ? ஏட்டுச் சுரை, கறிக்கு உதவிடுமோ ? சர்க்கரை, சீனி—என்று எழுதிக் காட்டிடின், நாவினில் இனிப்பு கொட்டிடுமோ !

உபதேசங்களும் நல்லுரைகளும், வாழ்வின் நெறியாக—நித்தியக் கடனுக—மாந்தர்தம் அன்ருடக் கடமையாக மாறிடில் அன்ருே நன்று - நல்லது ? செயலின்றிச் சொல்லாரம் மட்டுமே வாழ்வில நற்சுவை கூட்டிடுமோ ? அது வெறும் ‘சுவை’தான்—சொற்சுவைதான்—பயனற்ற சொல்தான் !

> “சனநாயக மரபுகளின் மூலம்—மக்களுக்குக் கிடைத்திடும் நல்வாய்ப்புக்களின் மூலம் சமுதாயம் பெற்றிடும் காரிய சாதனை குறித்துப் பெருமைப்படும் சான்ருேர்களாக - பண்பாளர்களாக நாமெல்லாம் விளங்கிட வேண்டும் ; இத்தகைய கனவுதான் - சிந்தனைதான் நமக்கெல்லாம் தேவை ”

என்று ஜெபர்சன் கூறியுள்ள கருத்து நமக்கெல்லாம் மெத்தவும் தேவைப்படுவதாகும்.

## இன்னல்களை நான் அறியாதவனல்லன் !

சமுதாயத்திற்குச் சேவை புரியும் உன்னதமான கடமைக்கு உங்களது உதவியையும் ஒத்துழைப்பையும் நான் விரும்பி வேண்டு

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

## பண்டைச் சிறப்பை மீண்டும் பெற்றிட !

“கண்ணியமிக்க எல்லாவற்றுக்கும் நாம் ஒரு காலத்தில் காவலர்களாக இருந்தோம் ! ஆனுல், அழிவின் கிருமிகள் பல்கிப் பெருகிட அனுமதித்தோம் !

“இன்று நமக்குள்ள பணி தூய காற்றையும், உதய சூரியனின் ஒளியை அனுமதித்து, நமது உண்மையான பழைய உருவையும், பொலிவையும் அடையவேண்டும் ! அத்தகைய பொலிவுமிக்க உருவம்தான், உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப்பரப்புக்களிலும் நமது புகழைப் பரப்பியது !

“நமது இலக்கியமும், கலையும், சிற்பமும், மன்பதை அறிவின் சிறந்த சின்னங்களாய்த் திகழ்ந்தன; ஆனுல், அவை இப்போது, காலம் ஆடிய சூறையாடல்களின் தழும்புகளை ஏற்று நிற்கின்றன ; ஆகவேதான், நமது அருமை பெருமைகளைப் பற்றி வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்களிடம் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிருேம்.”

—அறிஞர் அண்ணு

(அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரையில்)

## ‘பவுன்’ மதிப்பு குறைந்தபோது டவுனிங் தெரு பத்தாம் எண்ணில்...!

இங்கிலாந்து தனது ஸ்டர்லிங் மதிப்பைக் குறைப்பதாக அறிவித்ததற்கு முந்திய நாள் மாலை நேரத்தில், தலைமையமைச்சரின் அதிகாரபூர்வமான இருப்பிடமான டவுனிங் தெரு பத்தாம் எண்ணுள்ள இல்லத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அவரது கார் ஒன்று களவாடப்பட்டது !

‘பவுன் மதிப்புக் குறைந்துவிட்டதே’ என்ற பரபப்பில், மறுநாள் காலை மக்கள் கூட்டம், டவுனிங் தெரு பத்தாம் எண் இல்லத்தில் குழுமியபோதுதான், அந்தக் காரைப் போலீசார் மீட்டு வந்தனர் !

சேதம் ஏதுமில்லாமல் அருகில் உள்ள விமானநிலையம் ஒன்றில் விடப்பட்டிருந்தது, அந்தக் கார் !

முதல் நாள் மாலை தலைமையமைச்சரின் மாளிகைக்கு வழக்கமாக வந்து செல்லும் பயணிகள் ஏராளமானபேர் இருந்தும், அந்தக் கார் அனைவரது பார்வைக்கும் தப்பி எப்படிக் களவாடப்பட்டது என்பது பற்றிப் போலீசார் புலன் விசாரணை செய்கின்றனர் !

## பர்மாவில் சீனர்கட்கு ஏற்பட்ட கதி !

பொருளாதார — தொழில்நுட்ப உதவிபற்றிய சீன-பர்மிய உடன்பாடு முறிந்ததும், சீனத் தொழில்நுட்ப நிபுணர்களில் 140 பேரடங்கிய முதற் குழு சீனுவிற்குத் திரும்பிவிட்டது.

மொத்தத்தில் சுமார் 400 சீன நிபுணர்கள் பர்மாவிலிருந்தனர்.

# 'வில்சனே! வெளியே போ!'-- தலைமையமைச்சர் வாசல் முன் முழக்கம்

'பவுன்' நாணயத்தின் மதிப்புக் குறைக்கப்பட்டது என்பதை அறிந்த இலண்டன் மக்கள், விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமை அலுவல்களையும் மறந்து, டவுனிங் தெரு பத்தாம் எண் இல்லத்தின்முன் கூடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்!

'வில்சனே! வெளியே போ!' என்று கூட்டம் முழங்கியது.

தலைமையமைச்சர் மாளிகையைக் காவல் செய்துகொண்டிடிருந்தவர்கள் — வந்துசென்ற விருந்தினர்கள் — கடிதங்கள் கொடுத்துவந்த தபால்காரர்—ஆகியோர்கூடக் கேலி செய்யப்பட்டு எதிர்ப்புக்கு ஆளாக்கப்பட்டார்கள்!

கூட்டத்தில் சிலர், 'மதிப்புக் குறைப்பு இருக்காது' என முன் பொரு முறை வில்சன் கூறியதை நினைவுபடுத்திக் காட்டும் வகையில், வில்சனைப்போல் நடித்துக் கேலி செய்தனர்!

தலைமையமைச்சர் மாளிகைக்கு அடுத்தாற்போலிருந்த நிதியமைச்சரின் இல்லமும் ஆர்ப்பாட்டத்துக்கு ஆளாயிற்று! நிதியமைச்சர் ஜேம்ஸ் சாலகன் வெளியே வரும்போது, அவரை நோக்கி வீசப்பட்ட முட்டை ஒன்று தவறி, சுவரின் மீது பட்டது!

போலீசார் கூட்டத்தைக் கலைத்த பின்னரும், வீதியின் இரு முனைகளிலிருந்தும் எதிர்ப்பு முழக்கங்கள் மட்டும் கேட்டபடி இருந்தன!

# வேலூரில் எம். ஜி. ஆர்.

## நகராட்சி மன்றத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு

## உலகத்தமிழ் மாநாட்டுக்கு ரூ.3 இலட்சம் பெற்றார்

வேலூர், நவ. 19—

புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கட்கு, இன்று வேலூர் நகரம் மகத்தான வரவேற்பு அளித்துச் சிறப்பித்தது.

உலகத் தமிழ் மாநாட்டு நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடிகை சந்திரகாந்தா குழுவினரின் 'பொன்னியின் செல்வி' நாட்டிய நாடகத்திற்குத் தலைமை வகிக்க வருகை புரிந்த புரட்சி நடிகருக்கு வேலூர் நகராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பு மடல் படித்தளிக்கப்பட்டது.

வேலூர் கோட்டை வெளியில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்திலும் எம்.ஜி.ஆர். கலந்துகொண்டு உரையாற்றினார்.

வேலூர் எம்.ஜி.ஆர். மன்றச் சார்பிலும் அவருக்குச் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். வந்த வழி நெடுகிலும் சுமார் 2 கல் தொலைவு சாலையின் இருமருங்கிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமி நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

நகராட்சி மன்றம் கட்டியுள்ள தேவராஜ் மண்டபத்தை எம்.ஜி.ஆர். திறந்துவைத்தார்.

நகராட்சி மன்றத் தலைவர் திரு. மா. பா. சாரதி எம்.எல்.ஏ., நகராட்சி மன்றச் சார்பில் வரவேற்பிதழ் படித்தளித்தார்.

வேலூர் இராசகோபால் நிலையத்தில் 'பொன்னியின் செல்வி' நாட்டிய நாடகம் புரட்சி நடிகர் தலைமையில் — அமைச்சர் திரு. முத்துசாமி முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் மூலம் ரூ. 5 இலட்சம் வசூலாயிற்று; இதில் ரூ. 3 இலட்சம் உலகத் தமிழ் மாநாட்டுக்காக எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளிக்கப்பட்டது.

மீதியுள்ள ரூ. 2 இலட்சம், வ. ஆ. மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்காகவும், திருக்குறள் ஆராய்ச்சிக்காகவும் செலவிடப்படும்.

நடிகை சந்திரகாந்தாவின் கலை நிகழ்ச்சியைப் பாராட்டிப் பேசிய அமைச்சர் முத்துசாமி, பரிசுப் பொருளும் வழங்கினார்.

உலகத் தமிழ் மாநாட்டுக்குத் தாராளமாக வாரி வழங்கிய வ. ஆ. மாவட்ட மக்களுக்கு எம்.ஜி.ஆர். நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## சாமிநாதபுரத்தில் நெடுஞ்செழியன் மன்றம்

சேலம்—சாமிநாதபுரம் மெயின் ரோடில் நாவலர் நெடுஞ்செழியன் மன்றம் துவக்கப்பட்டு, கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: எம். இரத்தினம்; செயலாளர்: கே. ஆர். சுப்பிரமணியம்; பொருளாளர்: ஆர். மாரிமுத்து; துணைத் தலைவர்: ஒ. ஒபுளி; துணைச் செயலாளர்: எஸ். நந்தசாமி; துணைப் பொருளாளர்: ஆர். வெங்கட்ராமன்; 6-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

## சென்னை 98-வது வட்ட கருணாநிதி மன்றம்

சென்னை 98-வது வட்டம் சி.ஐ.டி. நகர் மாடல் அவுஸ் சாலையில் கலைஞர் மு. கருணாநிதி மன்ற அமைப்புக் கூட்டம், மாநகராட்சி உறுப்பினர் பவளவண்ணன் தலைமையில் நடைபெற்றது; கீழ்க்கண்டோர் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: வி. எம். பரசுராமன்; செயலாளர்: கே. எஸ். பாண்டியன்; துணைச் செயலாளர்: கு. பெரியசாமி; பொருளாளர்: கோ. ச. சங்கர்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

5—11—67 மாலை 4 மணிக்கு தோழர் வேலாயுதம் தலைமையில் பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி. அவர்கள், மன்றத்தைத் துவக்கிவைத்தார்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

பெறச் செய்தமைக்காக சலவைத் தொழிலாளர்களுக்கு தென் சென்னை சலவைத் தொழிலாளர் தி. மு. க. தேர்தல் குழு சார்பில் உளங்கனிந்த வணக்கத்தையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என, தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் சி. ஆர். கோலப்பா அறிவிக்கிறார்.

## சென்னை 94-வது வட்ட நாவலர் மன்றம்

8—10—67 இரவு 8 மணிக்கு சென்னை 94-வது வட்டம் நாவலர் மன்ற நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—தலைவர்: கொ. ப. கோவிந்தசாமி; துணைத் தலைவர்: பி. கோபாலகிருஷ்ணன்; செயலாளர்: பி. வேணுகோபால்; துணைச் செயலாளர்: பொ. க. வெங்கடாசலம்; பொருளாளர்: ஏ. வேணுகாந்தன்; துணைப் பொருளாளர்: வி. சுப்பிரமணியம்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

# பட்டமளிப்பு விழாவில் அண்ணா

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிறேன்; நீங்கள் கேலிப் புன்னகை புரிந்து, கண் சிமிட்டி, 'சொல்வது யாருக்கும் எளிது' என்று தயவுசெய்து கூறிட வேண்டாம்.

உங்களது வாழ்க்கை வழித் தடத்திலுள்ள இன்னல்களை அறியாதவனல்லன் நான்: உங்கள் மீதுள்ள சுற்றுச்சார்பின் அழுத்தத்தையும், செல்வாக்கையும் 'இல்லை' என்று ஒதுக்கித் தள்ளிவிடுபவனும் அல்லன் நான்!

## மிரட்டு விழிப் பார்வையை நிச்சயம் சந்திப்பீர்!

எந்த உலகத்தில் உங்களது வாழ்க்கைப் பயணத்தைத் துவக்க இருக்கிறீர்களோ அந்த உலகம், உங்களுடைய நம்பிக்கை ஒளியைக் குன்றச் செய்யலாம்; உங்கள் உறுதியை உருக்குலைக்கும் தன்மையில் இருக்கலாம்!

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில், உங்கள் இதயம்படிந்த கொள்கை—கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிரான பழக்கவழக்கங்களை நேருக்குநேர் சந்திக்கவேண்டி வரலாம்!

உலகில், சுயநலம் விரும்பிகள் கனக சிம்மாசனத்தில் வீற்றிருப்பதையும், அமைதியுருக்கொண்ட உழைப்பாளி ஒடுக்கப்படுவதையும் கண்டிக்கப்படுவதையும் நீங்கள் காண நேரிடலாம்! எல்லாவகைக் கொடுங்கோன்மையும் உங்கள்மீது மிரட்டுவிழிப் பார்வை செலுத்தலாம்! அந்தப் பயணத்தில் நீங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியும் ஒவ்வொரு போராட்டமாக இருக்கலாம்!

நேர்மைக் குணம் படைத்த நிறைநோக்காளர்களையும்கூட உற்சாகம் குன்றவைத்து, சுலபமும் வசதியுமிக்க குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்குமாறு பலவந்தப்படுத்தும் வலிமைமிக்கது இந்தச் சமூகச் சூழ்நிலை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்; ஆனால் அதேநேரத்தில், நாம் ஒன்றை உணரவேண்டும்—'சமூகத்திற்குப் பணியாற்றும் உள்ளுணர்வு மிக்க ஆடவர்—பெண்டிர் உள்ளடங்கிய அருவியோட்டம் போன்ற தொடர்பான திருக்கூட்டம் இருந்துவருகிறது; அது இந்தப் புனிதப் பணியை வெற்றிகரமாக நடத்துகிறது; மனித சமுதாயத்திற்கு வளமிக்கப் பயன்களைத் தந்திருக்கிறது' என்பதனை!

'சமூகப் பணி' எனும் இந்தத் தத்துவத்தை, தமிழர்களாகிய நாம், ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உச்சிமேல் வைத்து மெச்சத் தகும் வகையில் கடைபிடித்துப் பாராட்டி வந்திருக்கிறோம்; புறநானூற்றில் அந்தக் கருத்தைக் காண்கிறோம்—

"உண்டால் அம்ம இவ்வுலகம் ..........
.... .... .... .... .... .... ....
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

இத்தகைய செழுமைமிக்க பாரம்பரியத்தின் வழித்தோன்றல்களாகிய நீங்கள், சமூகச் சூழ்நிலையின் அழுத்தத்திலிருந்து விடுபட்டு, உங்களது திறமைக்கேற்றபடி சமூகத்திற்கு உழைத்திட வேண்டும்!

## தடைக் கற்களைத் துச்சமென மதிப்பீர்!

நல்லது செய்ய நினைத்திடும் யாரும், தங்கள் பாதையில் தட்டுப்படும் தடைக் கற்களை மக்களில் சிலர் நீக்கி உதவுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது! அந்தத் தடைக் கற்களோடு மேலும் சில கற்களை உருட்டிவிட்டாலும்கூட, மிகுந்த பொறுமையாயிருந்திட வேண்டும்.

"தடைகளைச் சந்தித்துப் பெறும் அனுபவம் மூலமாகவே (நமது) வலிமை தெளிவாகும்; மேலும் பலப்படும். பிறகு அந்த வலிமையே தடைகளை வெல்லும் திறனாய் மாறும்"

என்கிறார் அறிஞர் ஆல்பர்ட் சுவிட்சர்.

## நமது பிரச்சினை சாமானியமானதா?

பல்வேறு நாடுகளிலுள்ள பிரச்சினைகள் ஒரே மாதிரியான இயல்புடையவை எனினும், நமது நாட்டின் பிரச்சினைகளில் விசித்திரப் பண்பு சேர்ந்திருப்பதுடன் தனித் தன்மையும் இருக்கும்; எங்கோ ஏற்பட்ட கீறல்களிலிருந்து சிக்கல் எழுவது போன்ற தன்மை வாய்ந்ததல்ல நமது பிரச்சினை; அவ்விதம் இருக்குமாயின், அந்தப் பிரச்சினையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது; ஆனால் நமது பிரச்சினைகள், இதயத்தில் ஏற்படும் மண் அரிப்புப் போன்ற செயலால் ஏற்படுவது!

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போகவேண்டிய அவசியமில்லை; இருக்கிற வயலில் உரமிட்டு உழவு செய்யும் நிலையில் இருக்கிறோம்!

ஆம்; தத்துவங்களைத் தேடிச் செல்லவேண்டிய அவசியமில்லை; அதைவிடக் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கிறோம்; இருக்கிற தத்துவங்களை வகைப்படுத்தி—தொகைப்படுத்தி—தணிக்கைப்படுத்தும் நிலையில் இருக்கிறோம்!

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை; இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய சிலந்திக் கூடுகளை அகற்றி—கலந்துவிட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்!

சுருங்கச் சொன்னால், நாம் நம்மையே உணர்ந்தாக வேண்டிய நிலையில் இருக்கிறோம்! நமது சிந்தனைக் கட்டிடத்தை மீண்டும் சீர்திருத்திக் கட்டவேண்டிய நிலையில் இருக்கிறோம்!

# மே. வீ. வேணுகோபாலருக்குப் பாராட்டு விழா

## 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்று பட்டம் வழங்கினார்--அண்ணா

சென்னைத் தமிழ் இயல் மன்றத்தின் ஆதரவில், சிந்தாமணிச் செல்வர்—மகாவித்துவான்—கே. வீ. வேணுகோபால் (பிள்ளை) அவர்களின் 72-ஆவது பிறந்த நாள் விழா 29—10—67-ல், திரு. சோமசுந்தரத் தம்பிரான் தலைமையில் பாலர் அரங்கத்தில் நடைபெற்றது; அவ்வமயம், தரு. மே. வீ. வேணுகோபாலர் அவர்களுக்கு விழாத் தலைவர், பட்டாடை அணிவித்துப் பாராட்டு வழங்கினார்.

தமிழக தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. மு. இரா. பெருமாள் (முதலியார்) வேணுகோபாலர் எழுதிய 'தமிழ்—அன்றும் இன்றும்' என்னும் நூலை வெளியிட்டு, 1000 படிகளை அவர்களுக்கு மன்றத்தின் அன்பளிப்பாகக் கொடுத்துப் பாராட்டிப் பேசினார்.

பின்னர் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், புலவர்க் குழு உறுப்பினர்கள், தமிழகத் தமிழ்ப் பேரறிஞர் ஆகிய பலரால் தேர்ந்தெடுத்தளிக்கப்பட்ட 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்னும் பட்டத்தைச் சூட்டி, அதற்குரிய பதக்கத்தை அணிவித்துச் சிறப்புரையாற்றினார்கள்.

அடுத்து மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பல்கலைக் கழகத் துணைப் பேராசிரியர் ந. சஞ்சீவி, பச்சையப்பன் கல்லூரித் துணைப் பேராசிரியர் ந. ஆறுமுகம், திருவாட்டி இராசேசுவரி நடராசன் ஆகியோர், மகாவித்துவான் அவர்களின் குணநலன்களைப் பாராட்டிப் பேசினர்.

விழாத் தலைவர், திரு. மே. வீ. வேணுகோபாலரின், நன்றியறிதலைத் தெரிவித்தார்.

புலவர் கா. சச்சிதானந்தம் நன்றி கூறினார்.

# மாறன் வெற்றி-- பம்பாயின் பாராட்டு

தென் சென்னைத் தொகுதியில் வெற்றிபெற்ற தோழர் முரசொலி மாறன் அவர்களுக்கு பம்பாய் தி. மு. கழகச் சார்பில் தோழர் த. மு. பொற்கோ மலர்மாலை அணிவித்தார்.

வெற்றிச் செய்தி கிடைத்தவுடனேயே பம்பாய் தி. மு. க. பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்க தோழர் பொற்கோ— அமைச்சர் கருணாநிதி இல்லம் சென்று—மாறன் அவர்கட்கு மலர்மாலை அணிவித்ததுடன், அண்மையில் விபத்துக்காளான பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி அவர்களையும் சந்தித்து உடல் நலம் பற்றிக் கேட்டறிந்ததோடு, பம்பாய்த் தோழர்களின் அன்பையும் தெரிவித்துத் திரும்பினார்.

## கொலாபாவில் வெற்றி விழா

பம்பாய்-கொலாபா, கலை அரங்கில், அறிஞர் அண்ணா மன்றத்தின் சார்பில் 12—11—67 மாலை 4-மணிக்கு, முரசொலி மாறன் வெற்றியைப் பாராட்டி, என். முத்து தலைமையில் வெற்றி விழாக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் த. மு. பொற்கோ, எஸ். தியாகராஜன், நெல்லை வளவன், இராம. சண்முகராஜ், தளவை ச. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

அன்று சுமார் 500 பேருக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

## சென்னை 94-வது வட்டத் தோழர்கள் இனிப்பு வழங்கினர்

சென்னை 94-வது வட்டம் திருவள்ளுவர் மன்றச் சார்பில் முரசொலி மாறன் வெற்றியினைக் குறித்து 8—11—67 இரவு 8-மணியளவில் திரு. சி. இராமலிங்கம் தலைமையில் மு. எத்திராசன், பெ. வரதராசன், சி. ந. இராசன், யாகூப் ஆகியோர் வட்டார வாக்காளர் பெருமக்களுக்கு இனிப்பு வழங்கி நன்றி நவின்றனர்.

9—11—67 காலை முதல் மாலை வரை கழக இசைத்தட்டுகள் ஒலி பரப்பப்பட்டது. நண்பகல் 1,000 பேருக்கு திரு. இரா. சடகோபன் எம்.சி. தலைமையில் திரு. புதுவை சண்முகம் மூலமாக சாம்பார் சாதம் வழங்கப்பட்டது.

## சலவைத் தொழிலாளர்களுக்கு நன்றியறிதல்

"கழக வேட்பாளர் முரசொலி மாறன் அவர்களை ஆதரித்து வாக்குகளை அளித்து வெற்றி

(2-ம் பத்தி பார்க்க)

# நமது நாகரிகத்தில் வடுக்கள்

## சாதி--சமய வேறுபாடுகளால் கூனிக் குறுகி இருக்கிறோம்!

### 'பகுத்தறிவாளர்க்கு எதிராகப் பேசி மேலும் மூடநம்பிக்கையை வளர்க்கவேண்டாம்'--- பட்டம்பெற்ற இளைய சமுதாயத்தினருக்கு அறிஞர் அண்ணாவின் அறிவுரை

**" அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளே ! 'சனநாயகத்தோடு ஒட்டி வாழமுடியாத சாதி முறையை எதிர்த்துப் போர் தொடுத்திடுங்கள' என நான் உங்களை அழைக்கிறேன் ! விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழமுடியாத மூடப் பழக்க வழக்கங்களுக்கு எதிராகவும், சுதந்தரம்—சமத்துவம்—சகோதரத்துவம் ஆகியவற்றோடு ஒட்டி வாழமுடியாத பல்வேறு கோணங்களில் அமைந்த கொடுமைகளுக்கு எதிராகவும் போர் தொடுத்திடுமாறு உங்களை நான் அழைக்கிறேன் !**

**" அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளே ! உங்களுடைய—உங்களது குடும்பங்களுடைய நன்னிலைக்குப் பாடுபடுவதோடு, சமூகத்திற்கான பணியையும் நீங்கள் செய்யவேண்டியிருக்கிறது.**

**" பகுத்தறிவு வாதத்தின் ஒளிவிளக்கை ஏற்றிப் பிடிப்பவர்களாக நீங்கள் திகழவேண்டும் ! 'பகுத்தறிவு வாதம்' என்பது, அடிப்படை உண்மைகளை—நெறிகளை மறுப்பது என்பது அல்ல ; போலித்தனமான எண்ணத்தையும் செயலையும் அழித்தொழிப்பதுதான் பகுத்தறிவு வாதம்.**

**" முனைப்புடனும், உறுதியுனுடம் நீங்கள் உழைக்கவேண்டும் ; ஏனெனில், பல நூற்றுண்டுகளாய் கப்பிவிட்ட சிலந்திக் கூடுகளை நாம் அகற்றவேண்டும் ; காரண காரிய செயல் முறை, உயர்ந்த நிலையிலிருந்து ஆட்சிபுரியவைக்கவேண்டும் !"**

என்று அறிஞர் அண்ணா அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா உரையில் விளக்கிக் கூறி, இத்துறையில் சீரிய முறையில் பணியாற்றுமாறு மாணவர்கட்கு அன்பழைப்பு விடுக்கையில், தமிழரின் நாகரிகமும் பண்பாடும் காலத்தால் சிதைந்து சீரழிந்து கிடப்பதையும் சுட்டிக்காட்டிக் கூறி யதாவது :—

நமது நாகரிகமும் பண்பாடும் தொன்மை வாய்ந்தவை; அதில் தொய்வு உண்டாகச் செய்துவிட்டோம்! காலத்தால் அதில் வடுக்கள் தோன்றிவிட்டன !

அவற்றை எண்ணி நம்முடைய பண்பாட்டையும் நாகரிகத்தையும் மீண்டும் நிலைநாட்டுவதோடு, மற்றைய நாட்டவரின் சாதனைகளிலிருந்தும், நாம் பலவற்றைக் கற்றறிய வேண்டும்.

அறிவின் எந்த ஒரு துறையாயினும், அதில், நமக்கென்ற ஒரு முறை இல்லாமல் இல்லை, அற்புதமான உதாரணங்களாகத் திகழும் சான்றுகள் நமக்குண்டு ; எனவே, 'நம்முடைய வாழ்க்கை முறைகள் அழியாதவை—அமரத்துவமுள்ளவை' என்று நாம் கொண்டாடலாம்.

ஆயினும், அந்த முறைகளை இளமை குன்ருது—பசுமையோடு—தீவிரத் தன்மையோடு கூடியதாக வைத்திருக்க நாம் தவறிவிட்டோம் ! அவை சிரழிய நாம் இடமளித்துவிட்டோம் !

" ஒரு வாழ்க்கை முறை நிலைக்க வேண்டுமானால், என்றென்றும் இளமை குன்ருததாகவும், மாறுதலை ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கவேண்டும் " என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அதாவது, புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய இளம் இதயத்தைப்போல் பசுமையானதாக விளங்கவேண்டும்.

நம்முடைய நாகரிகம் பண்பாடு ஆகியவற்றுக்குப் புத்துயிரும், புதுப் பொலிவும் ஊட்டவேண்டியவர்களாக இருக்கிறோம் !

நெடுங்காலமாகப் பழைய முறைகளிலேயே ஊறி அவற்றைத் தாங்கி நின்று அவற்றுக்கு எதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக் கூறிக் காலத்தைக் கழித்திருக்கிறோம் !

இதே காலத்தில், உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தங்களது இடைவிடா சோதனைமூலம், பல புதிய முடிவுகளை அடைந்துள்ளனர் !

நாமோ, பண்டைப் பழம் பெருமையினிடத்தில்—இடிந்து கிடக்கும் கோட்டை கொத்தளங்கள் ஓரத்தில் அமர்ந்திருப்பதிலேயே திருப்தி கொள்கிறோம் !

நமக்கென்று வாய்த்த சமய சாத்திரமெல்லாம், வெறும் 'சடங்குகள்' என்கிற நிலைக்குச் சீரழிந்துவிட்டன ! வர்க்க பேதமற்ற—சாதிபேதமற்ற சமுதாயமாக இருந்த நமது சமுதாயம், இன்று சாதி—இன—வேறுபாடுகளால் கூனிக் குறுகி சிறு சிறு அமைப்புகளாகக் கட்டப் பெற்றுள்ளது !

மூடப் பழக்கவழக்கங்களைக் காணுமிடத்தில் நம்மில் பலர் வாய் மூடி மௌனிகளாக இருக்கிறோம் ! சிலர், சரித்திரம் பேசி அவற்றைச் சமாளிக்கப் பார்க்கிறார்கள் !

இவற்றுக்கு எதிரான கண்டனங்கள்—எதிர்ப்புக்கள் தோன்றியிருந்தும்கூட, நம்மை அறியாமல் நாம் இவற்றைப் பாதுகாக்கக்கூடியவர்களாக இருந்துவந்திருக்கிறோம் !

இந்தக் கொடுந் தீமைகளை எதிர்த்துப் போராட தீரமிக்க வீரர்கள் தோன்றியபோதெல்லாம், 'அவர்கள், உன்னதமான கருத்துக்களையும், புனிதமான கொள்கைகளையும் ஒழிக்க வந்தவர்கள்' என்று குறைகூறி வந்துள்ளோம் !

இந்த நிலைமைகளுக்கு எதிராக வெறுப்படைந்து கோபமடைந்த சமுதாயத்தின் கணிசமான பகுதியினரைத்தான், பெரியார் இராமசாமி அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தி, அந்தக் கோபத்தின் விரக்தியின் சின்னமாக விளங்குகிறார் !

உள்ள வாழ்க்கை முறையைச் சீரழிய விட்டுவிட்டுப் பகுத்தறிவாளர்களுக்கு எதிராகக் குறைகூறுவது மேன்மேலும் மூடநம்பிக்கைகள் வளரவும், இந்தச் சமுதாயம் சீரழியவுமே துணை புரிவதாகும் !

சமுதாயத்தினைச் சீரமைக்கும் பணியில் அவர்கள் ஈடுபடவேண்டும் ! நீண்ட காலமாகவே இப்பணி செய்யப்படாமல் உள்ளது !

பல்கலைக்கழகத்தில் தேர்ச்சிபெற்று பட்டதாரிகளாகி வெளியேறுவோர் அப்பணிக்குரிய தூதுவர்கள் என்றே நான் கருதுகிறேன்.

பல்கலைக்கழகங்களில் சமுதாயச் சீரமைப்புக் குறித்த சிக்கலான விஷயங்கள் திறந்த மனதோடு—முழுமையாகவும் விவாதிக்க வாய்ப்பு இருக்கிறது. இப்பல்கலைக்கழகம் போன்ற அறிவாலயங்கள், மக்களை, முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதாக இருக்கவேண்டுமென்று மக்கள் நினைக்கிறார்கள் !

# கோவிந்ததாசுக்கு மீண்டும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**துக்குப் போகத் தயாராக இருக்கிறோம் "**

என்ற இந்தி வெறியர்களின் உள்நோக்கத்தை, சேத் கோவிந்த தாஸ், அவசரப்பட்டு வெளிப்படுத்திவிட்டார்.!

ஆனால், இதனையெல்லாம், முன்கூட்டியே எதிர்பார்த்திருக்கிறோம் நாம் ! 'ஆங்கிலமும் கால வரையறையின்றி நீடிக்கும்' என்ற நாடாளுமன்றச் சட்டம், அரசியல் சட்டத்தின் முன்னல்—நீதிமன்றத்தில் தூளாக்கப்படும் என்பதனை, சேத் கோவிந்த தாஸ் போன்றவர்கள்உணர்ந்திருப்பதற்கு முன்னரே, 'பாதிக்கப் பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட இருப்பவர்கள்' என்ற வகையில்—தமிழக மக்களுக்கு உரிய முறையில்--கழகம் பல காலமாகவே எடுத்துச்சொல்லி வந்துள்ளது ; அதனைத்தான் கழக அரசும், இப்போது மீண்டும் வலியுறுத்தியுள்ளது !

ஆட்சி மொழிச் சட்டம் பற்றி கடந்த தடவை புதுடில்லியில் கூடிய காங்கிரசுச் செயற்குழு சந்தித்தபோது, நேரு கொடுத்த இரண்டு உறுதிமொழிகளைப் பற்றியும், அதன்மீது எழுந்த சில தடுமாற்றங்களைப் பற்றியும் குறிப்பிட்டு இதே இதழில் எழுத நேர்ந்தபோது,

**" இப்போது, 'எந்த உறுதிமொழி' என்ற தடுமாற்றம் பிறந்திருக்கிறது ; இனி, 'எந்த நேரு' என்ற கேள்வியும் பிறக்கலாம் "**

என சந்தேகித்தது, இப்போது சரியாகிக்கொண்டு வருகிறது !

" காலஞ்சென்ற நேரு ஏதோ உறுதிமொழி கொடுத்திருந்தாராம் ; அப்படியே கொடுத்திருந்தாலும், அது, அரசியல் சட்டத்துக்கு விரோதமானது " என்கிறார் சேத் !

மக்கள் மனதில் என்றும் வாழ்வதாகச் சொல்லப்படும் நேரு, இவ்வளவு குறுகிய காலத்துக்குள்ளேயே 'காலஞ்சென்ற' என்ற அலட்சியமான அடைமொழிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார் !

'அப்படியே உறுதிமொழி கொடுத்திருந்தாலும்......' என்ற விகுதி போட்டுவிட்டு, 'அதுவும் அரசியல் சட்டத்துக்கு விரோதமானதே' என்று முடித்துள்ளார், சேத் !

'நேரு சொல்லிவிட்டார் – போதாதா' என்று கேட்டவர்களுக்கு, அப்போதும் சொல்லப்பட்டது இதுதான் :–

**" சனநாயகத்தில்—எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும், அவரது வாய் உறுதிமொழிகளை நம்பியிருப்பது அழகல்ல !"**

அது இப்போது உறுதியாகிவிட்டது ! காங்கிரசுக்காரரான 'சேத்' வார்த்தைகளில், நேருவின் புகழும் அவரது உறுதிமொழியும் எவ்வளவு அலட்சியப்படுத்தப்படுகின்றன என்பதனைவிட, இதையும் நம்பி, நம்மை, 'சும்மா இருங்கள்' என்று உபதேசித்தவர்கள் மீதுதான் சந்தேகம் பிறக்கிறது.

முன்பு, 'இராணுவத்தை அனுப்புவதுதானே' என்றுகூறி, இந்தி வெறியர்களின் மனப்போக்கைக் காட்டினர் சேத் !

இப்போது, 'ஆட்சிமொழிச் சட்டமே வந்தாலும், அது, அரசியல் சட்டத்துக்குப் புறம்பானது ; கோர்ட்டுக்குப் போவோம்' என்ற எதிர்காலத் திட்டத்தினையும் தெளிவுபடுத்திவிட்டார், அதே சேத் !

அவருக்கு மீண்டும் நமது நன்றியைத் தெரிவித்துவிட்டு, இங்கே உள்ள காங்கிரசுக்காரர்களின் பக்கம் திரும்பி,

" ஆட்சிமொழிச் சட்டம் மட்டும் போதாது ; அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டமும் திருத்தப்பட வேண்டும் எனக் கேட்பதன் உள்நிலைமை இப்போதாவது புரிகிறதா"

எனக் கேட்போம் !

—எஸ். ஆர்.


**ரோஜா**

பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்


## முரசொலி மாறனுக்கு வழியனுப்பு

**மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்**

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற முரசொலி மாறன் எம்.ஏ., அவர்கள், முதன் முறையாக நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ள டில்லி பயணமாகிறார்.

22—11—67 புதன் காலை 9-மணியளவில், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், மாவட்டக் கழகச் சார்பில் அவருக்கு மாபெரும் வழியனுப்பு விழா நடைபெறும்.

கழகத் தோழர்கள் பெரும் திரளாக வந்து வழியனுப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நீலநாராயணன்**
மாவட்டச் செயலாளர்

## பெரியாருக்கு சென்னை மாநகராட்சி வரவேற்பு

சென்னை மாநகராட்சி மன்றம், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு வரவேற்பு அளிக்கிறது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சி 22—11—67 மாலை 5-மணிக்கு 'மை லேடீஸ்' பூந்தோட்டத்தில் நடைபெறும் ; மேயர் இரா. சம்பந்தம் வரவேற்பிதழ் படித்தளிப்பார்.

## அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றம்

**அண்ணா துவங்கி வைப்பார்**

சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றத் துவக்க விழா, 22—11—67 மாலை 5-மணிக்கு தேனும்பேட்டை எஸ். ஐ. இ. டி. கல்லூரி அரங்கில் நடைபெறும் ; முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைத்து உரையாற்றுவார்கள்.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**23--11--67**

**அம்மாப்பேட்டை**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பெரிய வீரப்ப செட்டி தெருவில் ; தலைவர் : மா. மாரிமுத்து ; பேசுவோர் : தமிழரசி பி.ஏ., ந. சாமிநாதன், ப. சீவேந்திரன், எஸ். தனசாமி, பி. எஸ். நாராயணன்.

அமைச்சர்
## ஏ. கோவிந்தசாமி

**சுற்றுப்பயணம்**

நவ. 22 காலை 10 மணி : திருச்சி ; மாலை 3 மணி : புதுக்கோட்டை ; 6 மணி : பூவாலூர் ; இரவு 7 மணி : லால்குடி ; 9 மணி : திருச்சி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)